இலங்கை மத்திய வங்கி
வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2020 மே 06 | அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் | 2020இன் 2ஆம் இலக்கம்

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## கொவிட்-19 வைரஸ் நோய் மூலம் பாதிக்கப்பட்ட சுயதொழில் மற்றும் தனிப்பட்டவர்கள் உள்ளடங்கலாக வர்த்தகங்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் மீதான 2020இல் 04,05 மற்றும் 06ஆம் இலக்கங்களைக் கொண்ட சுற்றறிக்கை, அதிவிசேட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் மீதான 2020.03.27 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் அடகு முற்பணங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் மீதான 2020 இன் 1ஆம் இலக்க நாணய விதிச்சட்ட கட்டளை

கொவிட் -19 இனால் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் வர்த்தகங்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பில் 2020.05.06ஆம் திகதி வரை இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளை அடிப்படையாகக் கொண்டு இவ் ''அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்'' தொகுக்கப்பட்டுள்ளன என்பதனையும் இதனுள் காணப்படுகின்ற பதில்கள், ஏதேனும் எதிர்கால ஒழுங்குவிதிகளை அத்துடன்/ அல்லது திருத்தங்களை அடிப்படையாகக் கொண்ட மாற்றங்களுக்கு உட்படுவன என்பதனையும் தயவுசெய்து கவனத்திற் கொள்க.

**1. கொவிட்-19 நிவாரணத் திட்டத்திற்கு தகைமைபெறும் தனிப்பட்டவர்கள் யார்?**

- கொவிட்-19 நோய் பரவலின் காரணமாக தமது தொழில்களை அல்லது வருமானத்தினை இழந்த சுயதொழில் செய்கின்ற தனிப்பட்டவர்கள் மற்றும் ஏனைய தனியாட்கள்.
- கொவிட்-19 நோய் தொற்றின் காரணமாக தமது வருமானங்கள்/ வர்த்தகங்கள் மோசமாக பாதிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் உழைப்போர் (வெளிநாட்டு நாணயத்தில் கடன்களை மீளச் செலுத்தவேண்டியவர்கள்).

**2. கோவிட்-19 நிவாரணங்களுக்கு தகைமைபெறும் வர்த்தகங்கள்/துறைகள் யாவை?**

- கொவிட்-19 நோய்ப் பரவலின் விளைவாக பணி இடையூறு மற்றும் வெளிநாட்டு முடக்கம் காரணமாக மோசமாக பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறை மற்றும் ஆடை, தகவல் தொழில்நுட்பம், தேயிலை, வாசனைத்திரவியங்கள், பெருந்தோட்டம், மற்றும் தொடர்புடைய ஏற்பாட்டுச் சேவை வழங்குநர்கள் உள்ளடங்கலாக நேரடி மற்றும் நேரடியற்ற ஏற்றுமதியுடன் தொடர்புடைய வர்த்தகங்கள் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளுவதற்கு இவ்வர்த்தகங்களுக்கு/ துறைகளுகளுக்கென புரள்வு வரையறை எதுவும் எடுத்துரைக்கப்படவில்லை.
- தயாரித்தல், பணிகள், வேளாண்மை (பதப்படுத்தல் உள்ளடங்கலாக), நிர்மாணம், பெறுமதிசேர்த்தல் மற்றும் ரூபா 1 பில்லியனுக்கு குறைந்த புரள்வுடன் கூடிய அதிகாரமளிக்கப்பட்ட உள்நாட்டு மருந்துப்பொருட்கள் வழங்குநர்கள் (இந்நோக்கத்திற்காக வருடாந்த புரள்வானது இறுதியாக கிடைக்கத்தக்க கணக்குகளின் அல்லது மதிப்பீடுகளின்

அடிப்படையில் கருத்திற்கொள்ளப்படும்) உள்ளடங்கலாக வர்த்தகப்படுத்தல் வியாபாரங்கள் போன்ற வியாபாரத் துறையில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள்.

- வெளிநாட்டு நாணயத்தில் கடன்களை மீளச்செலுத்தவேண்டிய அத்துடன் கொவிட்-19 இன் நோய்ப்பரவல் காரணமாக தமது வருமானம்/ வர்த்தகங்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயத்தை உழைக்கின்ற கூட்டுநிறுவனங்கள்.

**3. 'படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமை' (Debt Moratorium) என்பதனால் கருதப்படுவது யாது?**

- படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமை என்பது தொடர்புடைய சலுகை காலப்பகுதியொன்றினுல் செலுத்தவேண்டியதாக வருகின்ற மூலதனத்தை அத்துடன்/ அல்லது வட்டி கொடுப்பனவுகளைப் பிற்போடுவதனைக் குறிக்கின்றது.

- எவ்வாறாயினும், படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீயான உரிமை என்பது மூலதனம் அத்துடன்/ அல்லது வட்டியினை நிரந்தரமாக தள்ளுபடிசெய்தல் எனப் பொருள்படாது. சலுகைக் காலப்பகுதியினுள் செலுத்தவேண்டியதாக வருகின்ற மூலதனத்தினையும் அத்துடன்/ அல்லது வட்டிக்கொடுப்பனவுகளையும் திருத்தியமைக்கப்பட்ட மீள்கொடுப்பனவு திட்டத்திற்கமைவாக பிந்திய திகதியில் வாடிக்கையாளர் செலுத்துதல் வேண்டும்.

**4. இத்தகையை நிவாரணங்களை நான் யாரிடம் பெற்றுக்கொள்ள முடியும்?**

இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் என்பன இந்நிவாரணங்களை வழங்குகின்றன.

**5. கிராமிய வங்கிகள், சணச வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள்/ சங்கங்கள் போன்றவற்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களுக்காக நான் நிவாரணமொன்றினைப் பெற்றுக்கொள்ள முடியுமா?**

- இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மாத்திரம் இந்நிவாரணங்களை வழங்கும்.
- சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி (உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கி) என்பது இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற ஒரேயொரு சணச வங்கியாகும்.

**6. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற நிவாரணங்களுக்கு எவ்வகையான கொடுகடன் வசதிகள் தகைமை பெறுகின்றன?**

2020.05.15 அன்று அல்லது அதற்கு முன்னர் தகைமையுடைய கடன்பெறுநர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையொன்றின் பேரில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2020இன் 4,5 மற்றும் 6ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்படுத்தல்களுக்கு உட்படுகின்ற தவணைக் கடன்கள், குத்தகை வசதிகள், அடகு, மேலதிகப் பற்றுகள் மற்றும் ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட வர்த்தக நிதி வசதிகள் அத்துடன் வெளிநாட்டு நாணயக் கடன்கள்.

**7. காசு பிணையாக வைக்கப்பட்ட வசதிகளும் வீடமைப்புக் கடன்களும் இந்நிவாரணங்களில் இருந்து விலக்களிக்கப்படடுள்ளனவா?**

இல்லை. இந்நிவாரணங்களை வழங்குகின்றபோது பிணைய உறுதிகளின் வகைகள் கருத்திற்கொள்ளப்படுவதில்லை. எனவே காசு பிணையாக வைக்கப்பட்ட வசதிகளுக்கும் வீடமைப்பு கடன் வசதிகளுக்கும் கூட இந்நிவாரணங்கள் வழங்கப்படமுடியும்.

**8. இந்நிவாரணங்கள் நடைமுறைக்கு வரும் திகதி யாது?**

கடன் 2020.03.25 அன்று அல்லது அதன் பின்னர் செலுத்தவேண்டியவையாக வருகின்ற தவணைக் கொடுப்பனவுகள் அத்துடன்/ அல்லது குத்தகை வாடகைககள்.

**9. இந்நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்கு கோரிக்கையொன்றினை சமர்ப்பிக்க வேண்டுமா? அவ்வாறாயின் எவ்வாறு?**

- ஆம். அத்தகைய நிவாரணங்களை வழங்குவதற்கு நிதியியல் நிறுவனங்களுக்கு வசதியளிக்கக்கூடிய வாடிக்கையாளரின் பெயர், தேசிய அடையாள அட்டை/வியாபாரப் பதிவு இலக்கம், கடன் தொடர்பு/ கணக்கு இலக்கம் போன்ற ஆகக்குறைந்த அடிப்படைத் தகவல்களுடன் இணையத்தளமூடான வசதிகள் ஊடாக அல்லது மின்னஞ்சல்/ குறுந்தகவல் சேவை/ வட்ஸ்சப் உள்ளடங்கலாக வேறு தொடர்பூட்டல் வசதிகள் ஊடாக 2020.05.15 அன்று அல்லது அதற்கு முன்னர் கோரிக்கையொன்றினைச் வாடிக்கையாளர் சமர்ப்பிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
- எனினும், சாத்தியமான போதெல்லாம் தகைமையுடைய கடன்பெறுநர் (உதாரணமாக – தனிப்பட்டவர்களுக்கான கடன்கள், மேலதிகப் பற்றுகள், வர்த்தக நிதி, அடகு, கடன் அட்டைகள் போன்றன) மூலம் கோரிக்கையொன்று மேற்கொள்ளப்படாமல் நிதியியல் நிறுவனங்கள் சலுகைகளை வழங்கும்.

**10. தொடர்பூட்டல் வசதிகள் கிடைக்கப்பெறாத கிராமிய பிரதேசமொன்றிலிருந்து எழுத்துமூல விண்ணப்பத்தினை நான் செய்ய முடியாதிருப்பின் என்ன செய்வது?**

- சாத்தியமான இடங்களிலெல்லாம் கடன்பெறுநர் மூலம் கோரிக்கையொன்று முன்வைக்கப்படாமல் தகைமையுடைய கடன்பெறுநர்களுக்கு நிதியியல் நிறுவனங்கள் இச்சலுகைகளை வழங்கும்.
- எனினும், வாடிக்கையாளரின் பெயர், தேசிய அடையாள அட்டை/ வியாபாரப் பதிவு இலக்கம், கடன் தொடர்பு/ கணக்கு இலக்கம் போன்ற ஆகக்குறைந்த அடிப்படை

தகவல்களுடன் பொருத்தமான முறையொன்றினூடாக கோரிக்கையொன்றினை 2020.05.15 அன்று அதற்கு முன்னர் உங்களுக்கு வழங்கமுடியுமாயின் நிவாரணப்பொதி வழங்குவதை துரிதப்படுத்துவதற்கு அது நிதியியல் நிறுவனங்களுக்கு உதவும்.

- பெரும்பாலான வங்கிகள் தமது வெப்தளங்கள், சமூக வலைத்தளங்கள் மற்றும் தொலைக்காட்சி போன்றன ஊடாக பிரத்தியேக தொலைபேசி இலக்கங்களை விளம்பரப்படுத்துகின்றன. எனவே நீங்கள் தொடர்புடைய நிதி நிறுவனங்களுக்கு அழைப்பினை மேற்கொண்டு இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

**11. ஏதேனும் கோரிக்கையின்றி இந்நிவாரணங்களை நிதியியல் நிறுவனங்கள் ஏன் வழங்க முடியாது?**

- சாத்தியமான இடங்களிலெல்லாம் கடன்பெறுநர் மூலம் கோரிக்கையொன்று முன்வைக்கப்படாமல் தகைமையுடைய கடன்பெறுநர்களுக்கு நிதியியல் நிறுவனங்கள் இச்சலுகைகளை வழங்கும்.
- எனினும், நிதியியல் நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களுக்கு சேவையளிப்பதுடன் தன்னியக்கமாக்கப்பட்ட முறைமைகள் ஊடாகவே கடன் அறவீடுகள் இடம்பெறுகின்றன.
- எனவே, தகைமையுடைய வாடிக்கையாளரொருவர் கோரிக்கையொன்றினை முன்வைக்கின்ற போது இவ் வாடிக்கயைாளர்களை வேறுபடுத்துவதற்கும் சலுகைகளை முறைமைகளில் கைகளினால் மேற்கொள்வதற்கும் இது நிதியியல் நிறுவனத்திற்கு உதவும்.

**12. கோரிக்கையொன்றினை சமர்ப்பித்ததன் மீது எனக்கு சலுகை வழங்கப்பட்டிருப்பின் எவ்வாறு நான் அறிந்து கொள்வது?**

- கோரிக்கை கிடைக்கப்பெற்ற திகதியில் இருந்து 45 நாட்களுக்குள் வாடிக்கையாளரின் கோரிக்கைகளை செயன்முறைப்படுத்துதனை நிறைவுசெய்யுமாறு நிதியியல் நிறுவனங்கள் வேண்டப்பட்டுள்ளன.
- கோரிக்கையினை செயன்முறைப்படுத்தல் நிறைவுபெறும் வரை தொடர்புடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து கடன்களை அறவிடுதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட வேண்டும்.
- எனவே, நிதியியல் நிறுவனங்கள் இவ் 45 நாட்களைக் கொண்ட காலப்பகுதியினுள் கோரிக்கைகளின் பெறுபேறுகள் பற்றி அறிவிக்கும்.

**13. இத்திட்டத்தின் செயற்பாட்டு திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டியதாக இருந்துவந்த (நிலுவையாக) கொடுகடன் வசதிகளுக்கு என்ன நடக்கும்?**

- 2020.03.25ஆம் திகதியன்று அல்லது அதற்கு பின்னர் செலுத்த வேண்டியதாக வருகின்ற கடன் தவணைக் கொடுப்பனவுகளுக்காக/ குத்தகை வாடகைகளுக்காக சலுகைகள் வழங்கப்படும்.
- எனினும், <u>கொடுகடன் வசதியானது நிலுவையொன்றுடன்/ தவணைகடந்த நிலைவையில் செயலாற்றுகின்ற வகையினுல் காணப்படுமாயின்</u>, ஏற்புடைய படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக் காலப்பகுதியினுள் அந்நிலுவைகளை

உள்ளடக்குமாறு நிதியியல் நிறுவனங்களிடம் வாடிக்கையாளர் கோரிக்கையொன்றினை முன்வைக்கலாம். இவ்விடயம் தொடர்பில் எதிர்கால படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக் காலமானது நிலுவைகளினால்/ தவணைகடந்த காலப்பகுதியினால் குறைக்கப்படும்.

- உதாரணமாக 2020 பெப்புருவரி மற்றும் மாச்சு மாதங்களுக்கான கடன் தவணைக்கொடுப்பனவுகள் 2020 ஏப்பிறல் தொடக்கம் ஆரம்பிக்கின்ற 6 மாத படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமையினை பெற்றுக்கொள்ளுவதற்கு தகைமையுடைய செயலாற்றுகின்ற கடன் ஒன்று நிலுவைகளுடன் காணப்படுமாயின், அத்தகைய படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக் காலத்தினை 2020 பெப்புருவரியில் இருந்து ஆரம்பிப்பதற்கு திகதியை பிற்படுத்துவதற்கு வாடிக்கையாளர் நிதியியல் நிறுவனத்தைக் கோரலாம். இவ்விடயம் தொடர்பில் 6 மாதங்கள் 2020 பெப்புருவரியில் இருந்து கணிக்கப்படும் என்பதுடன் 2020 ஏப்பிறலில் இருந்தல்ல.

- மேலும், இவ்விடயம் தொடர்பில் அத்தகைய சரிபடுத்தலுக்காக வாடிக்கையாளர் கோரிக்கையொன்றினை மேற்கொள்ளவேண்டும் என்பதுடன் நிதியியல் நிறுவனத்துடன் கலந்தாலோசித்தலும் வேண்டும்.

- இல்லாவிடின், கடன் கழிப்புகள் தன்னியக்கமாக்கப்பட்டுள்ளமையினால் நிதியியல் நிறுவனங்கள் வாடிக்கையாளரின் கணக்கிற்கு பணம் வைப்புச் செய்யப்பட்டதன் உடனடியாக 2020.03.25 வரையான தவணைகடந்த ஏதேனும் தொகையினை அறவிடலாம்.

- <u>கொடுகடன் வசதிகள் 2020.03.25 அன்றுள்ளவாறு செயலாற்றமற்ற வகையினுள் காணப்படுமாயின்</u> படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக் காலம் 2020.09.30 திகதி வரை வழங்கப்படும். நிவாரணத் திட்டத்தின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்ட தகைமையுடைய வர்த்தகங்களுக்கு வாடிக்கையாளர் உரித்துடையவராக இருப்பாராயின், ஏற்கனவே இருக்கின்ற மற்றும் எதிர்கால வட்டி நிலுவையுடன் சேர்த்து தமது எஞ்சியிருக்கின்ற மூலதன தவணைக் கொடுப்பனவுகளை மீள்அட்டவணைப்படுத்துமாறு நிதி நிறுவனங்களிடம் கோரலாம் என்பதுடன் மீள்அட்டவணைப்படுத்தப்பட்ட கடன் மீள்கொடுப்பனவானது 2020.10.01ஆம் திகதி அல்லது அதற்கு பின்னர் தொடங்கும்.

- தற்போதுள்ள செயலாற்றமற்ற கடனின் ஏற்கனவே தீர்ப்பனவு செய்யப்பட்ட பாகத்தின் அடிப்படையில் கடன்பெறுநர் அனைத்து எதிர்கால வட்டி மற்றும் தவணைக் கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வாராயின், நிலுவை வட்டியின் 25% அல்லது 50% தள்ளுபடி செய்யப்படும்.

**14. ஏற்கனவே காணப்படுகின்ற நிலுவைகளைத் தீர்ப்பனவு செய்யாது சலுகையொன்றுக்காக நான் விண்ணப்பிக்க முடியுமா?**

ஆம். தவணைகடந்த நிலுவை காணப்படுகின்ற போதிலும் விண்ணப்பமொன்றினை மேற்கொள்ளமுடியும்.

**15. சலுகைகளுக்கு நான் தகைமையுடையவராக இருக்கின்ற போதிலும் நிதியியல் நிறுவனங்கள் ஏன் எனது தவணைக் கொடுப்பனவுகளை கழித்துள்ளன?**

- கடன் கழிப்புகள் பொதுவாக தன்னியக்கமாக்கப்பட்ட முறைமைகள் ஊடாக கையாளப்படுவதனால் நிதியியல் நிறுவனங்கள் எதிர்பாராத விதமாக கடன் தவணைக் கொடுப்பனவுகளை கழித்திருக்கலாம். பொதுவாக கடன்கழிப்புகள் தன்னியக்கமாக்கப்பட்ட முறைமைகள் ஊடாக கையாளப்படுவதனால், நிதியங்களை மீளளித்தல் கைகளினால் மேற்கொள்ளப்படுவதற்கு நிதியியல் நிறுவனங்களுக்கு நியாயமான காலப்பகுதியொன்று வழங்கப்படவேண்டும். (2020.05.15 திகதிக்கு முன்னர் விரும்பத்தக்கது).
- சலுகை வழங்கப்பட்டுள்ள கொடுகடன் வசதிகளில் இருந்து தவணைக்கொடுப்பனவுகள் ஏற்கனவே கழிக்கப்பட்டு இருப்பின் அவை திரும்பல் செய்யப்படும் என்பதுடன் அவை வாடிக்கையாளர் கணக்குகளிற்கான வரவுகளினூடாக மீளளிக்கப்படும்.

**16. தகைமைபெறாத கடன்பெறுநர்கள் 60 நாட்கள் வரையான சலுகை ஒன்றினைப் பெற்றிருக்கின்ற போதிலும் நிதியியல் நிறுவனங்கள் எனது கடன் தவணைக் கொடுப்பனவுகளை ஏன் கழித்துள்ளன?**

- கடன் கழிப்புகள் பொதுவாக தன்னியக்கமாக்கப்பட்ட முறைமைகள் ஊடாக கையாளப்படுவதனால் நிதியியல் நிறுவனங்கள் எதிர்பாராத விதமாக கடன் தவணைக் கொடுப்பனவுகளை கழித்திருக்கலாம். பொதுவாக கடன்கழிப்புகள் தன்னியக்கமாக்கப்பட்ட முறைமைகள் ஊடாக கையாளப்படுவதனால், நிதியங்களை மீளளித்தல் கைகளினால் மேற்கொள்ளப்படுவதற்கு நிதியியல் நிறுவனங்களுக்கு நியாயமான காலப்பகுதியொன்று வழங்கப்படவேண்டும். (2020.05.15 திகதிக்கு முன்னர் விரும்பத்தக்கது).

- இத்திட்டத்தின் கீழ் ஏதேனும் வேறு சலுகைகளுக்கு உரித்தல்லாத கடன்பெறுநர்களுக்கும் கூட 2020.04.01ஆம் திகதியிலிருந்து தொடங்குகின்ற 2020.04.01ஆம் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 60 நாட்கள் காலப்பகுதியொன்றின்போது தீர்ப்பனவிற்கு செலுத்தவேண்டியதாக வருகின்ற கடன்களை மற்றும் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிக 60 நாட்கள் வழங்கப்பட்டுள்ளமையினால் அத்தகைய காலப்பகுதியின்போது மேற்கொள்ளப்பட்ட கழிப்புகள் மீளளிக்கப்படும்.

**17. எனக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகள் செயலாற்றமற்றவையாக காணப்படுமாயின் ஏதேனும் சலுகைகளைப் பெற எனக்கு தகைமையுள்ளதா?**

- உங்களது கடன் வசதிகள் செயலாற்றமற்றவையாக இருப்பினும்கூட தகைமையுடைய வகைகளில் ஒன்றிற்கு நீங்கள் உரித்துடையவராயின் உங்களுக்கு சலுகைகள் வழங்கப்படும்.

- பின்வரும் சலுகைகள் தகைமையுடைய வர்த்தககங்களுக்கு மாத்திரம் வழங்கப்படும் (அதாவது கொவிட்-19 நோய்ப் பரவலின் விளைவாக பணி இடையூறு மற்றும் வெளிநாட்டு முடக்கம் காரணமாக மோசமாக பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறை மற்றும் ஆடை, தகவல் தொழில்நுட்பம், தேயிலை, வாசனைத் திரவியங்கள், பெருந்தோட்டம், மற்றும் தொடர்புடைய

ஏற்பாட்டு சேவை வழங்குநர்கள் உள்ளடங்கலாக நேரடி மற்றும் நேரடியற்ற ஏற்றுமதியுடன் தொடர்புடைய வர்த்தகங்கள் அதேபோன்று தயாரித்தல், பணிகள், வேளாண்மை (பதப்படுத்தல் உள்ளடங்கலாக) நிர்மாணம், பெறுமதிசேர்த்தல் மற்றம் அங்கீகாரமளிக்கப்பட்ட உள்நாட்டு மருந்துப்பொருட்கள் வழங்குநர்கள் உள்ளடங்கலாக வர்த்தகப்படுத்தல் வியாபாரங்கள் போன்ற வர்த்தகத்துறையில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் தொழில்முயற்சிகள்)

- 2020.03.25 வரை அறவிடப்பட்ட தண்ட வட்டி, தொடர்புடைய நிதியியல் நிறுவனங்களினால் தள்ளுபடி செய்யப்படல் வேண்டும்.
- 2020.09.30 வரை படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமை வழங்கப்படும்.
- செலுத்தவேண்டிய மூலதன நிலுவை மற்றும் தவணைதவறிய தவணைக்கொடுப்பனவுகளின் வட்டியின் நிலுவைப் பாகம் அத்துடன் எதிர்கால வட்டி என்பன 3 வருட காலப்பகுதியொன்றுக்கு மீளஅட்டவணைப்படுத்தப்படக் கூடியதாகயிருக்கும். எனினும், மூல முதிர்ச்சிக் காலம் 3 வருடங்களுக்கு மேற்பட்டதாயின் நிதியியல் நிறுவனங்கள் சமமான முதிர்ச்சிக் காலத்தின் மீது அறவிடக்கூடியதாக அத்தகைய வசதிகளை மீள அட்டவணைப்படுத்தலாம்.

- அதற்கமைய, ஏற்கனவேயுள்ள செயலாற்றமற்ற உமது கடன் வசதிக்கெதிராக படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமையினை வழங்குமாறு நிதியியல் நிறுவனத்திடம் நீங்கள் கோருவதாயின், நிதியியல் நிறுவனமானது 2020.09.30ஆம் திகதி படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமையினை வழங்கி கடனை மீளஅட்டவணைப்படுத்தும். இதனால் இப்புதிய மீளஅட்டவணைப்படுத்தப்பட்ட கடனானது 2020.10.01ஆம் திகதி தொடங்குகின்ற 3 வருடங்களினுள் (அல்லது 3 வருடங்களுக்கு மேல் கொண்ட மூல முதிர்ச்சியொன்றுடன் கூடிய வசதிகளுக்காக இணங்கிய நீண்டகால பகுதியொன்றினுள்) கொடுப்பனவுசெய்து முடிக்கப்படட வேண்டும்.

- மேலும், இம்மூன்று வருடங்களினுள் அல்லது இணங்கிய நீண்டகாலத்தினுள் இம்மீள அட்டவணைப்படுத்தப்பட்ட கடனை முழுமையாக மீளக் கொடுப்பனவு செய்வதாயின் 2020.09.30ஆம் திகதி வரை பிற்போடப்பட்ட வட்டி தவணைக்கொடுப்பனவுகளுக்கான தள்ளுபடியினை பெற்றுக்கொள்ள முடியும்.

- தற்போதுள்ள செயலாற்றமற்ற கடனின் ஏற்கனவே தீர்ப்பனவு செய்யப்பட்ட பாகத்தின் அடிப்படையில் கடன்பெறுநர் அனைத்து எதிர்கால வட்டி மற்றும் தவணைக் கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வாராயின், நிலுவை வட்டியின் 25% அல்லது 50% தள்ளுபடி செய்யப்படும்.

**18. நிதியியல் நிறுவனங்கள் என்னிடமிருந்து கழிவுசெய்த தவணைக் கொடுப்பனவுகளை மீளச் செலுத்துமா? அவ்வாறாயின் எவ்வகையான நிபந்தனைகளின் கீழ் மற்றும் எப்போது?**

- ஆம். சலுகைகள் வழங்கப்பட்டுள்ள கொடுகடன் வசதிகளில் இருந்து தவணைக்கொடுப்பனவுகள் ஏற்கனவே கழிக்கப்பட்டிருப்பின் அவை வாடிக்கையாளர்களின் கணக்குகளுக்கான வரவுகள் ஊடாக திரும்பல் செய்யப்பட்டு மீள்நிதியளிக்கப்படும்.
- இத்திட்டத்தின் கீழ் ஏதேனும் வேறு சலுகைகளுக்கு உரித்தல்லாத கடன்பெறுநர்களுக்கும் கூட 2020.04.01ஆம் திகதியிலிருந்து தொடங்குகின்ற 60 நாட்கள் காலப்பகுதியொன்றின்போது தீர்ப்பனவிற்கு செலுத்தவேண்டியதாக வருகின்ற கடன்களை மற்றும் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிக 60 நாட்கள் வழங்கப்பட்டுள்ளமையினால் அத்தகைய காலப்பகுதியின்போது மேற்கொள்ளப்பட்ட கழிப்புகளுக்காக மீளளிப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
- கடன் கழிப்புகள் பொதுவாக தன்னியக்கமாக்கப்பட்ட முறைமைகள் ஊடாக கையாளப்படுவதால் நிதியியல் நிறுவனங்களுக்கு கைகளினால் மீள் நிதியளிப்புகளை மேற்கொள்வதற்கு போதிய அவகாசம் வழங்கப்பட வேண்டும் (2020.05.15 இற்கு முன்னர் விரும்பத்தக்கது).

**19. நாம் இத்திட்டத்திற்கு தகைமைபெறுகின்ற வர்த்தகமோ /தனிப்பட்டவர்களோ அல்ல ஆனாலும் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்களை திரும்பச் செலுத்துவதற்கு எவ்வித மூலங்களையும் நாம் கொண்டிருக்கவில்லை, அவ்வாறாயின் என்ன செய்வது?**

சுற்றறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட எவையேனும் சலுகைகளுக்கு தகைமையற்ற அனைத்து கடன்பெறுநர்களும் 2020.04.01ஆம் திகதியிலிருந்து தொடங்குகின்ற 60 நாட்கள் காலப்பகுதியொன்றின்போது தீர்ப்பனவிற்கு செலுத்தவேண்டியதாக வருகின்ற கடன்களை மற்றும் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிக 60 நாட்கள் கொண்ட காலப்பகுதியினை பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

**20. சலுகைக்/ படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக் காலப்பகுதியின் போது வட்டிக் கூறுகளுக்கு என்ன நடக்கும்?**

படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக் காலப்பகுதியின் இறுதிவரை தவணைக் கொடுப்பனவுகளைச் (வட்டி + மூலதனம்) செலுத்தத் தேவையில்லை. எனினும் படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக் காலம் முடிவடைகின்றபோது சலுகைகள் வழங்கப்படுவதற்கு முன்னர் வாடிக்கையாளர்கள் இணங்கியவாறு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு தொடங்கவேண்டும். பிற்போடப்பட்ட மூலதனம் அத்துடன்/ அல்லது வட்டி தவணைக்கொடுப்பனவுகள் மீது வாடிக்கையாளர்களிடமிருந்து உரிமம்பெற்ற வங்கிகள் மேலதிக வட்டி எதனையும் அறவிடாது.

**21. படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமை காலத்திற்கு ஏற்புடையதாக காணப்படுகின்ற மூலதனம் மற்றும் வட்டி தவணைக் கொடுப்பனவுகளை வாடிக்கையாளர்களிடமிருந்து எதிர்காலத்தில் வங்கி அறவிடுமா? அவ்வாறாயின் எவ்வாறு?**

- ஆம். சுற்றறிகைகளின் பிரகாரம் தொடர்புடைய படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமையானது வாடிக்கையாளர்களுக்கு மூலதனம் மற்றும் வட்டி என்பவற்றை மீளச் செலுத்துவதனை பிற்போடுவதற்கான இயலுமையை மாத்திரம் வழங்குகின்றது. எனவே, படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமை என்பது மூலதனம் அத்துடன்/ அல்லது வட்டி தவணைக்கொடுப்பனவுகளை தள்ளுபடி செய்வதற்கு உரிமம்பெற்ற வங்கிகளைக் கோருவதில்லை. உதாரணமாக படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமை பின்வருமாறு செயற்படுத்தும்:

  **உதாரணம்**

  கடன்வழங்கிய திகதி 01.04.2019

  கடன் தொகை ரூ. 2,000,000

  கடன் காலம் (மூல) 24 மாதங்கள்

  வட்டி வீதம் 16%

  மாதாந்த தவணைக் கொடுப்பனவு பெறுமதி (பெறுவிக்கப்பட்டது) = ரூபா. 97,926

  2020 மாச்சு இறுதியில் உள்ளவாறு எஞ்சியிருக்கும் மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளின் எண்ணிக்கை = 12

  - வாடிக்கையாளர் ஒருவர் 2020 ஏப்பிறல் தொடக்கம் ஆறு மாதங்கள் படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக்கு உரித்துடையவராயின், அப்போது 2020 ஏப்பிறலில் இருந்து 2020 செத்தெம்பர் வரை வங்கிக்கு தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அவ் வாடிக்கையாளர் தற்போது வேண்டப்படமாட்டார்.

  - எனினும் இவ்வாடிக்கையாளர் 2020 ஒத்தோபர் தொடக்கம் 2020 மாச்சு கொண்ட ஆரம்பத்தில் இணங்கிய திகதி வரை ரூ.97,926 கொண்ட மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கும் 2021 செத்தெம்பர் வரை மேலதிக ஆறு மாதங்களுக்கு செலுத்துவதற்கும் வேண்டப்படுவார்.

  - அடிப்படையில் செய்யப்படுவது என்னவெனில் மூல மீள்கொடுப்பனவு அட்டவணையானது வாடிக்கையாளர் மூலம் கொடுப்பனவு செய்யப்படவேண்டிய ஒரேமாதிரியான தவணைக்கொடுப்பனவு பெறுமதியுடன் படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக் காலத்திற்கு சமமான காலப்பகுதியொன்றினால் நீடிப்புச் செய்யப்படுவதாகும்.

**22. எனது காசோலை கொடுப்பனவுகளை நான் நிறுத்தவேண்டுமாயின் அதனை எவ்வாறு செய்துகொள்ள முடியும் மற்றும் கட்டணமொன்று அறவிடப்படுமா?**

வரைந்த காசோலைகள் மீதான கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கு உங்களது தொடர்புடைய உரிமம்பெற்ற வங்கியினை நீங்கள் கோரலாம். 2020.09.30 வரையிலான காலப்பகுதியின்போது

கொடுப்பனவுகளை நிறுத்துவதற்காக கட்டணங்களை அறவிடவேண்டாம் என அனைத்து நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**23. எனது தகைமையுடைய அல்லது சலுகைகள் வழங்கப்படாத எதுவாயினும் கொடுகடன் வசதிகளுக்காக தண்ட அறவீடுகள் அல்லது தாமதக் கொடுப்பனவு கட்டணங்கள் என்னிடம் அறவிடப்படுமா?**

- திரும்பிய காசோலைகள், கொடுப்பனவுகளை நிறுத்துதல், அனைத்து கடன்அட்டைகள் மற்றும் ஏனைய கொடுகடன் வசதிகள் மீதுமான தாமதக்கொடுப்பனவு கட்டணங்கள் போன்றவற்றை 2020.09.30 வரையான காலப்பகுதியின்போது அறவிடவேண்டாம் என அனைத்து நிதி நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன.
- வழங்கப்பட்ட சலுகைகளின் கீழ் பிற்போடப்பட்டுள்ள மூலதன அத்துடன்/ அல்லது வட்டி தவணைக்கொடுப்பனவுகள் மீது மேலதிக வட்டி எதுவும் அறவிடப்படமாட்டாது.

**24. வர்த்தக வருமானத்திற்காக பிரத்தியேகமாக பயன்படுத்தப்படுகின்ற ஆனால் சுற்றறிக்கைகளில் அட்டவணைப்படுத்தபடாத குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட வாகனங்களின் குத்தகை வசதிகளுக்கு என்ன நடக்கும்?**

- சுயதொழில் பெற்றுள்ள தனிப்பட்டவர்களுக்கும் முச்சக்கரவண்டிகள், பாடசாலை வேன்கள், பாரஊர்திகள், பொருட்கள் கொண்டு செல்லுவதற்கு பயன்படுத்துகின்ற சிறியரக வாகனங்கள், பேரூந்துகள் போன்றவற்றை சொந்தமாகக் கொண்டுள்ள தனிப்பட்டவர்களுக்கும், அத்துடன் வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்ற வாடகைக் கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் (தனிப்பட்ட பாவனைக்கானதல்ல) போன்ற தொடர்புடைய சொத்துகள் என்பவற்றுக்கு மாத்திரம் குத்தகை வாடகை மீது ஆறு மாதகாலப் படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமை வழங்கப்பட்டுள்ளது.
- எனவே மேற்குறித்த வகையினுள் குத்தகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் உட்படாவிடின் அத்துடன் தனிப்பட்ட பாவனைக்கானதாகவும் இருப்பின் 2020.04.01ஆம் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 60 நாட்கள் காலப்பகுதியொன்றின்போது தீர்ப்பனவிற்கு செலுத்தவேண்டியதாக வருகின்ற கடன்களை மற்றும் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிக 60 நாட்கள் கொண்ட காலப்பகுதியினை பயன்படுத்திக் கொள்ளமுடியும். இது சுற்றறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள எவையேனும் வேறு சலுகைகளுக்கு உரித்துக்கொண்டிராத அனைத்து ஏனைய கடன்பெறுநர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**25. நான் வர்த்தகமொன்றினை செய்கின்றேன் ஆனால் எனது புரள்வு ரூபா 1.2 பில்லியனாகும் எனக்கு எவ்வகையான நிவாரணங்கள் ஏற்புடையதாகக் காணப்படுகின்றன?**

- இது உங்களது வர்த்தகம் உரித்துடைய துறையினைச் சார்ந்திருக்கும்.
- கொவிட்-19 நோய்ப் பரவலின் விளைவாக பணி இடையூறு மற்றும் வெளிநாட்டு முடக்கம் காரணமாக மோசமாக பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறை மற்றும் ஆடை, தகவல் தொழில்நுட்பம், தேயிலை, வாசனைத்திரவியங்கள், பெருந்தோட்டம், மற்றும் தொடர்புடைய ஏற்பாட்டு சேவை வழங்குநர்கள் உள்ளடங்கலாக நேரடி மற்றும் நேரடியற்ற ஏற்றுமதியுடன்

தொடர்புடைய வர்த்தகங்கள் ஆகியவற்றின் கீழ்வருகின்ற வர்த்தகங்களுக்கென/ துறைகளுக்கொன புரள்வு வரையறை எதுவும் கிடையாது.

- உங்களது வியாபாரம் ஏதேனும் இத்துறைகளுக்கு உரித்துள்ளதாகவிடத்து அத்துடன் சுற்றறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள எவையேனும் சலுகைகளுக்கு தகைமையற்றதாக காணப்படுமாயினும் கூட 2020.04.01ஆம் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 60 நாட்கள் காலப்பகுதியொன்றின்போது தீர்ப்பனவிற்கு செலுத்தவேண்டியதாக வருகின்ற கடன்களை மற்றும் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிக 60 நாட்கள் கொண்ட காலப்பகுதியினை பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

**26. மாதமொன்றுக்கு ரூபா 2 மில்லியன் புரள்வுடன் கூடிய புடைவை வியாபாரமொன்றினை நான் வைத்திருக்கின்றேன். ஆனால் காண்பிப்பதற்கு என்னிடம் கணக்குகள் கிடையாது எனினும் ஏபிசி வங்கியில் நான் நடைமுறைக்கணக்கொன்றினைப் பேணிவருகின்றேன். எனது கடையில் என்னிடம் கையிருப்புகள் உள்ளதுடன் தற்போதைய நிலைமையின் காரணமாக எனது வியாபாரம் முடிவின்றி மூடப்பட்டுள்ளது இதனால் எனது மனைவி மற்றும் பிள்ளைகள் வாழ்வதற்கு வேறு வழிகள் எதையும் கொண்டிருக்கவில்லை. இவ்வகையான திட்டத்தில் இருந்து எனக்கு கிடைக்கக்கூடிய நிவாரணங்கள் யாவை?**

- இத்திட்டமானது புரள்வினைக் கருத்திற்கொள்ளாது ஆடைத்துறையில் உள்ள பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கென படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமையை வழங்குகின்றது, இது உங்களது வியாபார பெயரில் பெற்றுக்கொண்ட கடன்களுக்கு ஏற்புடையதாகயிருக்கும்.
- அதேபோன்று சுயதொழில் பெற்றுள்ள தனிப்பட்டவர்களுக்கும் முச்சக்கரவண்டிகள், பாடசாலை வேன்கள், பாரஊர்திகள், பொருட்கள் கொண்டு செல்லுவதற்கு பயன்படுத்துகின்ற சிறியரக வாகனங்கள், பேருந்துகள் போன்றவற்றை சொந்தமாகக் கொண்டுள்ள தனிப்பட்டவர்களுக்கும், அத்துடன் வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்ற வாடகைக் கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் போன்ற தொடர்புடைய சொத்துகள் என்பவற்றுக்கு மாத்திரம் குத்தகை வாடகை மீது ஆறு மாதகாலத்திற்கு படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமை வழங்கப்பட்டுள்ளது.

- 2020.09.30 வரையான காலப்பகுதியின் போது தீர்ப்பனவு செய்வதற்கு நிலுவையாக வருகின்ற அல்லது முதிர்ச்சியடைகின்ற அல்லது மீளாய்வு செய்யப்படுகின்ற அனைத்து மேலதிகப் பற்றுகள், வர்த்தக நிதி மற்றும் அடகு வசதிகள் 2020.09.30 வரை நீடிக்கப்பட்டுள்ளன.
- மேலும் அனைத்து தனிப்பட்ட காலங்கள் மற்றும் குத்தகை வாடகைகள் என்பவற்றக்கு மூன்று மாதகாலப் படுகடன் மீளச்செலுத்தும் கால நீடிப்பு தகைமையுடைய தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டதுடன். இது வீடமைப்புக் கடன்கள், நுகர்வுக்கடன்கள், காசு பிணையாக வைக்கபட்ட கடன்கள், குத்தகை வசதிகள் போன்ற அனைத்து கொடுகடன் வசதிகளையும் உள்ளடக்குகின்றது. ஆயினும் வழங்கப்பட்ட தொகை ரூபா 1 மில்லியனாக அல்லது அதனை விட குறைவாக இருக்கவேண்டும்.
- நீங்கள் பெற்றுக்கொண்ட கொடுகடன் வசதிகள் சுற்றறிக்கையில் உள்ள இச்சலுகைகள் எதற்கும் தகைமை பெறாது இருப்பினும் கூட 2020.04.01 தொடக்கம் ஆரம்பிக்கின்ற 60

நாட்கள் காலப்பகுதியின் போது தீர்ப்பனவு செய்யவேண்டி வருகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிகமாக 60 நாட்களைக் கொண்ட காலப்பகுதியொன்றை பெற்றுக்கொள்ள முடியும்.

- இதற்கு புறம்பாக ரூபா 500,000 இனை விட குறைவான பெறுமதயுடைய காசோலையின் செல்லுபடியான காலம் 2020.05.15 வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அத்தகைய காசோலைகள் 2020 மாச்சு மற்றும் ஏப்பிறல் மாதங்களில் பழமையடையாது அல்லது காலாவதியடையாது இருத்தல் வேண்டும்.
- மேலும், 2020.09.30 வரையான காலப்பகுதின்போது திரும்பிய காசோலைகள், கொடுப்பனவுகளை நிறுத்துதல், அனைத்து கொடுகடன் அட்டைகள் மற்றும் ஏனைய கொடுகடன் வசதிகள் மீதான தாமதக்கட்டணங்கள் போன்றவற்றுக்கு கட்டணம் அறவிடவேண்டாம் என அனைத்து நிதியியல் நிறுவனங்களுக்கும் அறவிக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட சலுகைகளின் கீழ் பிற்போடப்பட்ட மூலதனம் அத்துடன்/அல்லது வட்டி தவணைக் கொடுப்பனவுகள் மீது மேலதிக வட்டி எதுவும் அறவிடப்படமாட்டாது.

**27. நான் சிறிய வர்த்தகமொன்றினை மேற்கொண்டு வருவதுடன் தெரிவுசெய்யப்பட்ட ஆடைப்பொருட்களை உற்பத்தி செய்வதில் 6 பெண்கள் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் நான் விற்பனை நிலையமொன்றினையும் இயக்கிவருகின்றேன். விற்பனை நிலையத்தில் 3 ஊழியர்களும் ஒரு வாகனமும் சாரதியும் உள்ளனர். இன்னும் நான் அவர்களது சம்பளங்களையும் கடைக்கான மற்றும் பணியிடத்திற்கான வாடகையினையும் வாகனத்திற்கான குத்தகை தவணைக்கொடுப்பனவையும் செலுத்தவேண்டியுள்ளது. இது மாதமொன்றுக்கு ரூபா 225,000 ஆகும். மூலதனம் மற்றும் வட்டி என்பன மாதாந்தம் செலுத்தப்படவேண்டிய ரூபா 10 மில்லியன் கொண்ட வங்கி கடன் ஒன்றை நான் பெற்றுள்ளேன். இத்திட்டத்தின் கீழ் என்னைப் போன்றோருக்கு கிடைக்கக்கூடிய நிவாரணங்கள் யாவை?**

- திட்டமானது புரள்வினைக் கருத்திற் கொள்ளாது ஆடைத்துறையில் உள்ள பாதிக்கப்பட்ட வர்த்தகங்களுக்காக 6 மாத படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமையை வழங்குகின்றது. இது உங்களது பெயரில் பெற்றுக்கொண்ட கடன்களுக்கும் ஏற்புடையதாக இருக்கும்.

- அதேபோன்று சுயதொழில் பெற்றுள்ள தனிப்பட்டவர்களுக்கும் முச்சக்கரவண்டிகள், பாடசாலை வேன்கள், பாரஊர்திகள், பொருட்கள் கொண்டு செல்லுவதற்கு பயன்படுத்துகின்ற சிறியரக வாகனங்கள், பேரூந்துகள் போன்றவற்றை சொந்தமாகக் கொண்டுள்ள தனிப்பட்டவர்களுக்கும், அத்துடன் வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்ற வாடகைக் கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் போன்ற தொடர்புடைய சொத்துகள் என்பவற்றுக்கு மாத்திரம் குத்தகை வாடகை மீது ஆறு மாதகாலத்திற்கு படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமை வழங்கப்பட்டுள்ளது.

- 2020.09.30 வரையான காலப்பகுதியின் போது தீர்ப்பனவு செய்வதற்கு நிலுவையாக வருகின்ற அல்லது முதிர்ச்சியடைகின்ற அல்லது மீளாய்வு செய்யப்படுகின்ற அனைத்து மேலதிகப் பற்றுகள், வர்த்தக நிதி மற்றும் அடகு வசதிகள் 2020.09.30 வரை நீடிக்கப்பட்டுள்ளன.

- மேலும், தகைமையுடைய தனிப்பட்டவர்களுக்கு அனைத்து தனிப்பட்ட கடன்கள் மற்றும் குத்தகை வாடகைகள் என்பவற்றக்கு 3 மாதங்களுக்கு படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமை வழங்கப்பட்டதுடன் இது வீடமைப்புக் கடன்கள், நுகர்வுக் கடன்கள், காசு பிணையாக வைக்கபட்ட கடன்கள், குத்தகை வசதிகள் போன்ற அனைத்து கொடுகடன் வசதிகளையும் உள்ளடக்குகின்றது. ஆயினும் வழங்கப்பட்ட தொகை 1 மில்லியனாக அல்லது அதனை விட குறைவாக இருக்கவேண்டும்.

- நீங்கள் பெற்றுக்கொண்ட கொடுகடன் வசதிகள் சுற்றறிக்கையில் உள்ள இச்சலுகைகள் எதற்கும் தகைமைபெறாது இருப்பினும் கூட 2020.04.01ஆம் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 60 நாட்கள் காலப்பகுதியொன்றின்போது தீர்ப்பனவிற்கு செலுத்தவேண்டியதாக வருகின்ற கடன்களை மற்றும் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிக 60 நாட்கள் கொண்ட காலப்பகுதியினை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

- இதற்கு புறம்பாக ரூபா 500,000 இனை விட குறைவான பெறுமதியை விட காசோலையின் செல்லுபடியான காலம் 2020.05.15 வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அத்தகைய காசோலைகள் 2020 மாச்சு மற்றும் ஏப்பிறல் மாதங்களில் பழமையடையாது அல்லது காலாவதியடையாது இருத்தல் வேண்டும்.
- மேலும், 2020.09.30 வரையான காலப்பகுதின்போது திரும்பிய காசோலைகள், கொடுப்பனவுகளை நிறுத்துதல், அனைத்து கொடுகடன் அட்டைகள் மற்றும் ஏனைய கொடுகடன் வசதிகள் மீதான தாமதக்கட்டணங்கள் போன்றவற்றுக்கு கட்டணம் அறவிடவேண்டாம் என அனைத்து நிதியியல் நிறுவனங்களுக்கும் அறவிக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட சலுகைகளின் கீழ் பிற்போடப்பட்ட மூலதனம் அத்துடன்/அல்லது வட்டி தவணைக் கொடுப்பனவுகள் மீது மேலதிக வட்டி எதுவும் அறவிடப்படமாட்டாது.

**28. மேலதிகப் பற்றுகளுக்காக கிடைக்கப்பெறும் சலுகைகள் யாவை?**

- 2020.09.30 அன்று வரையான காலப்பகுதியின் போது தீர்ப்பனவு செய்யவேண்டியதாக வருகின்ற அல்லது முதிர்ச்சியடைகின்ற அல்லது மீளாய்வு செய்யப்படுகின்ற நிலையான மேலதிகப்பற்று வசதிகள் 2020.09.30 வரை நீடிக்கப்பட்டுள்ளன.

- எனினும் 2020.03.25 அன்றுள்ளவாறான தற்காலிக மேலதிகப் பற்று வசதிகள் விடயத்தில் காலாவதியானது தகைமையுடைய கடன்பெறுநர்களுக்காக இரண்டு மாதங்களினால் நீடிப்புச் செய்யப்படவேண்டும்.

- அத்தகைய வசதிகள் மீதான வட்டி வீதமானது நீடிக்கப்பட்ட காலப்பகுதியின்போது 13% உச்சம் கொண்டதாக இருக்கும்.
- படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக் காலப்பகுதியின்போது கடன்பெறுநர்கள் வட்டிசெலுத்துவதற்கு வேண்டப்படவில்லை. எவ்வாறாயினும் மேலதிகப்பற்றுகள் மீது வட்டியினை கொடுப்பனவு செய்ய விரும்புகின்ற எவரேனும் கடன்பெறுநர் விரும்பினால் அதனை செலுத்தலாம்.

**29. வர்த்தக நிதி வசதிகளுக்காக கிடைக்கப்பெறுகின்ற சலுகைகள் யாவை?**

- 2020.09.30 வரையான காலப்பகுதியின்போது செலுத்தவேண்டியதாகவுள்ள அல்லது முதிர்ச்சியடைகின்ற அல்லது மீளாய்வுக்குட்பட்டிருந்த தகைமையுடைய வர்த்தக நிதி வசதிகள் 2020.09.30 வரை நீடிப்புச்செய்யப்பட்டுள்ளன.

- இவை கொவிட்-19 நோய்ப் பரவலின் விளைவாக பணி இடையூறு மற்றும் வெளிநாட்டு முடக்கம் காரணமாக மோசமாக பாதிக்கப்பட்ட மருந்தாக்கல் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள், உணவு, உரம் மற்றும் அத்தியாவசிய மூலப்பொருட்கள் மற்றும் இயந்திரங்கள் அத்துடன் உபகரணங்கள் போன்றவற்றுக்கான <u>இறக்குமதி வசதிகளையும்</u> சுற்றுலாத்துறை மற்றும் ஆடை, தகவல் தொழில்நுட்பம், தேயிலை, வாசனைத் திரவியங்கள், பெருந்தோட்டம், மற்றும் தொடர்புடைய ஏற்பாட்டு சேவை வழங்குநர்கள் உள்ளடங்கலாக நேரடி மற்றும் நேரடியற்ற ஏற்றுமதியுடன் தொடர்புடைய வர்த்தகங்கள் என்பவற்றுக்கு வழங்கப்பட்ட <u>ஏற்றுமதி வசதிகளையும்</u> உள்ளடக்கும்.

**30. அடகு வசதிகளுக்கு கிடைக்கக்கூடிய வசதிகள் யாவை?**

- 2020.09.30 வரையான காலப்பகுதியின்போது செலுத்தவேண்டியதாகவுள்ள அல்லது முதிர்ச்சியடைகின்ற அல்லது மீளாய்வுக்குட்பட்டிருந்த தகைமையுடைய அடகு வசதிகள் வசதிகள் 2020.09.30 வரை நீடிப்புச்செய்யப்பட்டுள்ளன.

- அடகுவைப்பதற்கான வாக்குறுதியாக ஏற்றுக்கொள்ளப்படடுள்ள தங்கத்திலான தனிப்பட்ட பொருட்களின் பிணை மீது பணம் கடன்வழங்கப்பட்டுள்ள அனைத்து புதிய அடகு முற்பணங்களுக்காகவும் 2020.04.27 அன்று அல்லது அதன் பின்னர் மீளப்புதுபிக்க வேண்டிய ஏற்கனவேயுள்ள அடகுவசதிகளுக்காகவும் உரிமம்பெற்ற வங்கியொன்றின் மூலம் அறவிடத்தக்க உயர்ந்தபட்ச வட்டிவீதமானது அடகுக் காலம் ஒரு வருடத்தை விட குறைவானதாகயிருப்பின் ஆண்டொன்றுக்கு 12 சதவீதமாக அல்லது மாதத்திற்கு 1 சதவீதமாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

**31. இச்சலுகைகளுக்கு தனிப்பட்ட கடன்கள் மாத்திரமா தகைமையுடையனவா?**

இல்லை. இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2020 இன் 4 மற்றும் 5 ஆம் இலக்க சுற்றறிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்படுத்தல்களுக்குட்பட்டு தவணைக் கடன்கள்,

குத்தகை வசதிகள், அடகு, மேலதிகப்பற்றுகள் மற்றும் ரூபாய் அத்துடன் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட நிதி வசதிகள் என்பன தகைமையுடைய கொடுகடன் வசதிகளாகும்.

**32. வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக் கொண்டுள்ள வாடிக்கையாளருக்கென கிடைக்கப்பெறுகின்ற சலுகைகள் யாவை?**

- 3 மாத கால படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமை வழங்கப்பட்டுள்ளது ஆயினும் வழங்கப்பட்ட தொகை ரூபா 1 மில்லியன் அல்லது அதனை விடக் குறைவாக இருக்கவேண்டும்.

- ரூபா 1 மில்லியனை விஞ்சி வழங்கப்பட்ட வீடமைப்புக் கடன்கள் சுற்றறிக்கைகளில் வழங்கப்பட்ட எவையேனும் சலுகைகளுக்கு உரித்துடையன அல்ல என்பதனால் அத்தகைய வாடிக்கையாளர் 2020.04.01ஆம் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 60 நாட்கள் காலப்பகுதியொன்றின்போது தீர்ப்பனவிற்கு செலுத்தவேண்டியதாக வருகின்ற கடன்களை மற்றும் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிக 60 நாட்கள் கொண்ட காலப்பகுதியினை மாத்திரம் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

**33. எத்தனை வீடமைப்புக் கடன் தவணைக்கொடுப்பனவுகளை நான் மீதப்படுத்த முடியும்?**

- 3 மாத படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமை வழங்கப்பட்டுள்ளது ஆயினும் வழங்கப்பட்ட தொகை ரூபா 1 மில்லியன் அல்லது அதனை விடக் குறைவாக இருக்கவேண்டும்.
- ரூபா 1 மில்லியனை விஞ்சி வழங்கப்பட்ட வீடமைப்புக் கடன்கள் சுற்றறிக்கைகளில் வழங்கப்பட்ட எவையேனும் சலுகைகளுக்கு உரித்துடையன அல்ல என்பதனால் அத்தகைய வாடிக்கையாளர் 2020.04.01ஆம் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 60 நாட்கள் காலப்பகுதியொன்றின்போது தீர்ப்பனவிற்கு செலுத்தவேண்டியதாக வருகின்ற கடன்களை மற்றும் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிக 60 நாட்கள் கொண்ட காலப்பகுதியினை மாத்திரம் பயன்படுத்திக் கொள்ளமுடியும். எனவே தகைமையுடைய படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக் காலப்பகுதியின் போது உங்களது வீடமைப்புக் கடன் தவணைக்கொடுப்பனவுகளை செலுத்துவதனை நீங்கள் நிறுத்தமுடியும். ஆனால் படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக் காலத்தின் இறுதியில் மீள்கொடுப்பனவுகள் தொடங்கியவுடன் நீங்கள் அவற்றை கொடுப்பனவு செய்யவேண்டும்.

**34. தனியார் துறை நிறைவேற்றுத்தரமல்லாத ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் யாவை?**

- அனைத்து தனியார் துறை நிறைவேற்றுத்தரமல்லாத ஊழியர்களுக்கும் வழங்கப்பட்ட தனிப்பட்ட கடன்கள் மீது 2020.05.30 வரை படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமை வழங்கப்பட்டுள்ளதுடன் இத்தனிப்பட்ட கடன்களின் பெறுமதி மீது வரையறை எதுவும் கிடையாது.

- எனினும் கடன்பெறுநரின் பதவியின் படிநிலை அடிப்படையில் அல்லது தொழில்தருநரிடமிருந்து உறுதிபடுத்தலொன்றினை பெற்றுக்கொள்வதன் மூலம் கடன்பெறுநர் "நிறைவேற்றுதரமல்லாத ஊழியர் ஒருவரா" என்பதனை நிதியியல் நிறுவனம் தீர்மானிக்கும்.

**35. அரசாங்கத் துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் யாவை?**

- ரூபா 1 மில்லியனை விட குறைவான பெறுமதியுடைய அனைத்து தனிப்பட்ட கடன்கள் மற்றும் குத்தகை வாடகைகளுக்கும் 3 மாத்திற்கு படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமை வழங்கப்பட்டுள்ளது.

- இது வீடமைப்புக் கடன்கள், நுகர்வுக் கடன்கள், பணம் பிணையாக வைக்கப்பட்ட கடன்கள், குத்தகை வசதிகள் ஆகியன உள்ளடங்கலாக அரசாங்கத்துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து கொடுகடன் வசதிகளையும் உள்ளடக்குகின்றது ஆயினும் வழங்கப்பட்ட தொகை ரூபா 1 மில்லியன் அல்லது அதனை விட குறைவானதாக இருக்கவேண்டும்.

- சுற்றறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட எவையேனும் வேறு சலுகைகளுக்கு உரித்தல்லாத அரசாங்கத் துறை ஊழியர்களுக்கு மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து ஏனைய கொடுகடன் வசதிகளுக்கும் 2020.04.01ஆம் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 60 நாட்கள் காலப்பகுதியொன்றின்போது தீர்ப்பனவிற்கு செலுத்தவேண்டியதாக வருகின்ற கடன்களை மற்றும் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிக 60 நாட்கள் கொண்ட காலப்பகுதியினை மாத்திரம் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

**36. ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்பட்ட சலுகைகள் யாவை?**

- ரூபா 1 மில்லியனை விட குறைவான பெறுமதியுடைய அனைத்து தனிப்பட்ட கடன்கள் மற்றும் குத்தகை வாடகைகளுக்கும் மூன்று மாதத்திற்கான படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமை.

- இது வீடமைப்புக் கடன்கள், நுகர்வுக் கடன்கள், பணம் பிணையாக வைக்கப்பட்ட கடன்கள், குத்தகை வசதிகள் ஆகியன உள்ளடங்கலாக அரசாங்கத்துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து கொடுகடன் வசதிகளையும் உள்ளடக்குகின்றது ஆயினும் வழங்கப்பட்ட தொகை ரூபா 1 மில்லியன் அல்லது அதனை விட குறைவானதாக இருக்கவேண்டும்.

- சுற்றறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட எவையேனும் வேறு சலுகைகளுக்கு உரித்தல்லாத அரசாங்கத் துறை ஊழியர்களுக்கு மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து ஏனைய கொடுகடன் வசதிகளுக்கும் 2020.04.01ஆம் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 60 நாட்கள் காலப்பகுதியொன்றின்போது தீர்ப்பனவிற்கு செலுத்தவேண்டியதாக வருகின்ற கடன்களை

மற்றும் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிக 60 நாட்கள் கொண்ட காலப்பகுதியினை மாத்திரம் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

**37. ரூபா 1 பில்லியனுக்கு மேல் கடன்பெற்றுள்ள ஓய்வூதியம் பெறுவோர் அத்துடன்/ அல்லது அரசாங்கத்துறை ஊழியர்கள் சலுகைகளுக்கு/படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக்கு தகைமையுடையவர்களா?**

ஆம். 2020.04.01ஆம் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 60 நாட்கள் காலப்பகுதியொன்றின்போது தீர்ப்பனவிற்கு செலுத்தவேண்டியதாக வருகின்ற கடன்களை மற்றும் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிக 60 நாட்கள் கொண்ட காலப்பகுதி வழங்கப்பட்டுள்ளது.

**38. பணியாற்று மூலதனக் கடனை அத்துடன்/ அல்லது முதலீட்டு நோக்கக் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு எவ்வகையான தேவைப்படுத்தல்களை நாம் நிறைவுசெய்யவேண்டும் மற்றும் அத்தகைய கடன்களின் பண்புகள் யாவை?**

- நிதியியல் நிறுவனங்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணியாற்று மூலதனத்திற்காக அல்லது முதலீட்டு நோக்கங்களுக்காக மேலதிகக் கடன் ஒன்றினை அல்லது புதிய கடன் வசதி ஒன்றினை வழங்கலாம் ஆயினும் கடன்பெறுநர் நம்பகமான வியாபாரத் திட்டமொன்றினை சமர்ப்பிக்க வேண்டும்.

- பணியாற்று மூலதனக் கடனானது தயாரித்தல், பணிகள், வேளாண்மை, நிர்மாணம், சுயதொழில் வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் உள்ளடங்கலாக நுண்பாக மற்றும் சிறிய அத்துடன் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கும் சுற்றுலா, ஏற்றுமதிகள் மற்றும் தொடர்புபட்ட ஏற்பாட்டு சேவை வழங்குநர்கள் போன்றவற்றின் வியாபாரங்களுக்கு மாத்திரம் "சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி" என்ற சௌபாக்கியா (சுபீட்சம்) கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

- கடன்பெறுநர் (வியாபாரம்) பல நிதி நிறுவனங்களில் கொடுகடன் வசதிகளைப் பெற்றுக்கொண்டு இருந்தபோதிலும் ஒரு கடன்பெறுநர் ஒரேயொரு கடனுக்கு மாத்திரம் தகைமைபெறுவார். இவ்வசதியினை வழங்குகின்ற நிதியியல் நிறுவனங்கள் இதே திட்டத்தின் கீழ் கடன்களுக்காக வேறு நிதியியல் நிறுவனங்களை வாடிக்கையாளர் நாடவில்லை என்பதற்கு வாடிக்கையாளரிடமிருந்து எழுத்துமூலம் உறுதிப்படுத்தல் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளளும்.

- தொடர்புடைய நிதியியல் நிறுவனமானது பேணப்படுகின்ற வங்கிக் கணக்குகள் (வெளிநாட்டு நாணயக்கணக்குகள் உள்ளடங்கலாக) மற்றும் வழங்கப்படும் பிணைய உறுதி என்பனவற்றின் அடிப்படையில் கடன்பெறுநரின் உண்மையான தகைமையினை கணிப்பிடும்.

- இதன் கீழ் வழங்கப்படும் உயர்ந்தபட்ச கடன் தொகை தொடர்புடைய வியாபாரத்தின் இரண்டு மாதங்களுக்கு தேவைப்படுகின்ற பணியாற்று மூலதனமாக இருக்கும். இதனால் தொடர்புடைய நிதியியல் நிறுவனம் கடன்பெறுநரின் பணியாற்று மூலதன தேவைப்பாட்டினை

முறையாக மதிப்பீடு செய்து இரண்டு மாத காலப்பகுதியினுள் ஏற்படவுள்ள கட்டாய செலவுகளை (சம்பளங்கள்/கூலிகள் போன்ற) மாத்திரம் சமாளிப்பதற்கு அதனை மட்டுப்படுத்தி கடன் அளவு பற்றி இணைக்கம் தெரிவிக்கும். வியாபாரமானது செயற்பாடற்றிருக்குமாயின் மூலப்பொருட்கள் போன்ற வழமையான பணியாற்று மூலதனக் கூறுகள் இரண்டு மாதத்திற்கு தேவையான பணியாற்று மூலதனத்தை கணிக்கின்றபோது கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாது.

- நிதியியல் நிறுவனமானது வாடிக்கையாளரின் இடர்நேர்வு தோற்றப்பாடு மற்றும் கடந்த காலப் பதிவுகள் போன்றவற்றினைச் சார்ந்து பணியாற்று மூலதனத்தை/ முதலீட்டு நோக்கக் கடனை வழங்குகின்றபோது பொருத்தமான பிணைய உறுதிகளைக் கோரலாம்.

- அதற்கமைய, நிதியியல் நிறுவனங்கள் தகைமையுடைய செயலாற்றுகின்ற மற்றும் செயலாற்றமற்ற கடன்பெறுநர்களுக்கு இரண்டு மாதங்களை விஞ்சாத பணியாற்று மூலதனத்தினை ரூபாய்களில் (வெளிநாட்டு நாணய வசதிகள் அல்ல) பணியாற்று மூலதன கடன் வசதியினை வழங்கும் என்பதுடன் அத்தகைய கடன் ஆண்டுக்கு 4% சமமான வட்டிவீதத்தில் இரண்டு வருடங்களில் மீளச்செலுத்தப்படல் வேண்டும்.

- முதலீட்டு நோக்கக் கடன் வசதியானது உரிமம்பெற்ற வங்கிகளால் மாத்திரம் வழங்கப்படவேண்டும் என்பதுடன் செயலாற்றுகின்ற கடன்பெறுநர்களுக்கு மாத்திரம் வியாபார நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு கடன்பெறுநர் ஒருவருக்கு வங்கியொன்று ரூபா 300 மில்லியனை விஞ்சாதவாறு ரூபாய்களில் வழங்கப்படவேண்டும். அத்தகைய கடன், ஆண்டுக்கு 1.5% கொண்ட வட்டிவீதத்துடன் சேர்த்து உயர்ந்தபட்ச சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வீதத்திற்கு சமமான வட்டிவீதத்தில் 5 வருடங்களில் மீளச் செலுத்தப்படவேண்டும்.

- 2020.03.25 தொடக்கம் 2020.09.30 வரையான காலப்பகுதிக்காக படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமையானது பணியாற்று மூலதனக் கடன்கள் மற்றும் முதலீட்டுக் நோக்கக் கடன்கள் ஆகிய இரண்டுக்கும் வழங்கப்படும்.

**39. நிதியியல் நிறுவனம் எனது தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கவில்லையாயின் அல்லது எனது மின்னஞ்சல்களுக்கு பதில் அனுப்பவில்லையாயின் நான் என்ன செய்ய முடியும்?**

- நீங்கள் தொடர்புடைய நிதியியல் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ வெப்தளத்தில் பிரவேசித்து பொதுவான தொடர்பு விபரங்களைப் பெற்று அல்லது முறைப்பாடுகள் வசதிகள் கிடைக்கப்பெறுமாயின் வெப்தள முறைப்பாடொன்றினை மேற்கொள்ளமுடியும்.
- மின்னஞ்சல்கள், குறுந்தகவல் சேவைகள்/ வட்ஸ்சப் செய்திகள் என்பவற்றிற்காக இலங்கை மத்திய வங்கி நிதியியல் நிறுவனங்களை 45 நாட்களினுள் பதிலிறுத்துமாறு கோரியுள்ளது. எனவே உங்களுக்கு பதிலிறுத்துவதற்கு அத்தகைய நிறுவனங்களுக்கு தயவுசெய்து நியாயமான காலப்பகுதியினை வழங்கவும்.

- பெரும்பாலான நிதியியல் நிறுவனங்கள் தொலைக்காட்சிகளில் பிரத்தியேகமான தொலைபேசி இலக்கங்களை விளம்பரப்படுத்துகின்றன. எனவே அத்தகைய இலக்கங்கள் ஊடாக தொடர்புடைய நிதியியல் நிறுவனங்களை நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

**40. நான் நிதியியல் நிறுவனமொன்றிடம் ஏற்கனவே வேண்டுகோலொன்றினை விடுத்து பதிலிறுப்புக்காக எதிர்பார்த்திருக்கின்றேன் அல்லது துரிதப்படுத்தப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கான கொடுகடன் ஆதரவு மீதான 2020இன் 2ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்காக வழங்கப்பட்ட சலுகைகளைப் ஏற்னவே பயன்படுத்தியிருந்தால் என்ன நடக்கும்? நான் 2020இன் 4ஆம் மற்றும் 5ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் கீழ் வழங்கப்படும் சலுகைகளை பயன்படுத்திக்கொள்வதற்கு தகைமை பெறுவேனா?**

- பொருளாதார வளர்ச்சியினைத் துரிதப்படுத்துவதற்கான கொடுகடன் ஆதரவு மீதான 2020இன் 2ஆம் இலக்க முன்னைய சுற்றறிக்கையானது இன்னும் செல்லுபடியானதாகும்.

- முன்னைய திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட சலுகைகளைத் தொடர்ந்தும் பெறுவதற்கு விரும்புகின்ற கடன்பெறுநர்கள் (மூலதன படுகடன் படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமையின் நீண்ட காலப்பகுதியினையும் நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கான மேலதிக வட்டிசெலவுகள் இன்மையினையும் கருத்திற்கொண்டு. எனினும் பணியாற்று மூலதனத்திற்கான வட்டிவீதம் உயர்வானதாகக் காணப்படும்) முன்னைய திட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லலாம்.
- புதிய திட்டத்திற்கு மாறுவதற்கு கடன்பெறுநர் விரும்புவாராயின் (முன்னைய திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள கடன்பெறுநர்கள் உள்ளடங்கலாக) வங்கிகள் புதிய திட்டத்தின் கீழ் அத்தகைய கோரிக்கைகளுக்கு இடமளித்தல் வேண்டும்.
- எனினும், முன்னைய திட்டத்தினைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு வாடிக்கையாளரை வங்கி வற்புறுத்தலாகாது.
- மேலும் கடன்பெறுநர் ஒரே நேரத்தில் இரண்டு திட்டங்களின் கீழும் சலுகைகளை அனுபவிக்கமுடியாது.

**41. தனது வியாபாரத்தினைப் பதிவுசெய்யாத அத்துடன் கணக்கெதனையும் பேணாத சில்லறை விநியோகத்தர் ஒருவர் படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமையினை பெற்றுக்கொள்ளமுடியுமா?**

- 2020.04.01ஆம் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 60 நாட்கள் காலப்பகுதியொன்றின்போது தீர்ப்பனவிற்கு செலுத்தவேண்டியதாக வருகின்ற கடன்களை மற்றும் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிக 60 நாட்கள் கொண்ட காலமொன்றினைப் பெற்றுக்கொள்வார்.

**42. ரூபா 1 பில்லியனுக்கு மேற்பட்ட புரள்வொன்றுடன் நான் வேளாண்மை வியாபாரமொன்றினை செய்துவருகின்றேன். நான் 6 மாதத்திற்கான படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமையினை பெற்றுக்கொள்ள முடியுமா?**

- அத்தகைய வியாபாரங்கள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி வகையினுள் வருகின்ற போது மாத்திரம் வேளாண்மை வியாபாரமொன்றுக்கு 6 மாதத்திற்கான படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமை வழங்கப்பட்டுள்ளது (அதாவது வருடாந்த புரள்வு ரூபா 1 பில்லியனுக்கு சமனாக அல்லது அதற்கு கீழ் இருத்தல் வேண்டும்).

- இவ்வியாபாரத்தின் புரள்வு 1 பில்லியனுக்கு மேல் காணப்படுவதனால் 6 மாதத்திற்கு படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமை வழங்கப்படாது.

- எவ்வாறாயினும் 2020.04.01ஆம் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 60 நாட்கள் காலப்பகுதியொன்றின்போது தீர்ப்பனவிற்கு செலுத்தவேண்டியதாக வருகின்ற கடன்களை மற்றும் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிக 60 நாட்கள் கொண்ட காலப்பகுதியொன்று வழங்கப்படும்.

**43. நான் வாகன இறக்குமதி செய்கின்ற சுயதொழில் செய்கின்ற ஒருவர் ஆவேன். எனக்கு படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமையினை பெற்றுக்கொள்ள முடியுமா?**

- இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2020இன் 4ஆம் மற்றும் 5ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் வாகன இறக்குமதி வியாபாரம் ஏதேனும் படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக்கு தகைமையுடையதல்ல.
- எவ்வாறாயினும் 2020.04.01ஆம் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 60 நாட்கள் காலப்பகுதியொன்றின்போது தீர்ப்பனவிற்கு செலுத்தவேண்டியதாக வருகின்ற கடன்களை மற்றும் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிக 60 நாட்களைக் கொண்ட பொதுவான சலுகை வழங்கப்படும்.

**44. தனிப்பட்ட கடன்களை/ வீடமைப்பு கடனைப் பெற்றுக்கொண்டுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்புடைய சலுகைகள் யாவை?**

- வழங்கப்பட்ட தொகை ரூபா 1 மில்லியனை விட குறைவாக இருக்குமிடத்து அனைத்து தனிப்பட்ட கடன்கள் மற்றும் குத்தகைகளுக்கு மூன்று மாத படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமையை பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் தகைமைபெறுவர்.
- வழங்கப்பட்ட கடன்கள் ரூபா 1 மில்லியனுக்கு மேற்பட்டதாயின் 2020.04.01ஆம் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 60 நாட்கள் காலப்பகுதியொன்றின்போது தீர்ப்பனவிற்கு செலுத்தவேண்டியதாக வருகின்ற கடன்களை மற்றும் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிக 60 நாட்கள் கொண்ட பொதுவான சலுகை வழங்கப்படும்.

--------அடிக்கடி கேட்கப்படும் இக் கேள்விகள் 2020.05.06 அன்று இற்றைப்படுத்தப்பட்டவையாகும்.-------